## வகுப்பு - 10

## இயல் - 2

### கவிதைப்பேழை

### காற்றே வா ! (பாரதியார்)

**குறுவினா**

**1. பாரதியார் எவ்வாறெல்லாம் பாராட்டடப்பட்டார்?**

பாரதியார் 'நீடுதுயில் நீக்கப்பாடி வந்த நிலா' 'சிந்துக்குத்தந்தை' ' பாட்டுக்கொரு புலவன்' எனப் பாரட்டப்பட்டார்.

**2. பாரதியார் எழுதிய நூல்களை எழுதுக.**

பாரதியார் குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

**சிறுவினா**

**1. காற்றே வா கவிதையில் பாரதியார் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**காற்றிடம் பாரதியார் கூறுவன :**

- காற்றே நீ, பூக்களின் மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு வா.
- மனதை மயங்கச் செய்யும் இனிய வாசனையுடன் வா.
- இலைகளின் மீதும் நீர்அலைகளின் மீதும் உராய்ந்து சுவாசிக்க உயிர் வளியை எங்களுக்குக் கொண்டு வந்து தருக என்று கூறுகிறார்.
- காற்றே நீ எமது உயிர் நெருப்பு நீடித்து நின்று நல்லொளிதருமாறு நன்றாக வீசு.
- சக்தி குறைந்து எமது உயிர் நெருப்பை அணைத்துவிடாதே.
- பேய் போல வீசி அதனை மடித்துவிடாதே. மெதுவாக சீராக நெடுங்காலம் நின்று வீசிக் கொண்டிரு உனக்குப் பாட்டுகள் பாடி, புகழ்ச்சிகள் கூறி உன்னை வழிபடுகின்றோம்.

**2. பாரதியார் பற்றி குறிப்பு வரைக.**

- *மகாகவி சுப்பிரமணிய பாரதியார் "நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா," 'சிந்துக்குத்தந்தை' என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர் எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்டவர்.*
- *கவிஞர், கட்டுரையாளர், கேலிச்சித்திரம், கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர் சிறுகதை ஆசிரியர் இதழாளர்.*
- *சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், பெண்ணடிமைத்தனத்தையும் தன் பாடல்களில் எதிர்த்து எழுதியவர்.*
- *கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களை எழுதியவர் – குழந்தைகளுக்காக பாப்பா பாட்டு, ஆத்திசூடி தந்தவர்.*
- *இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர். பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப்பட்டவர். இவருடைய கவிதைத் தொகுப்பிலுள்ள காற்று என்னும் தலைப்பிலான வசன கவிதையின் ஒரு பகுதியே பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.*

**3. வசன கவிதை குறிப்பு வரைக.**

*உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும், கவிதை வடிவம் வசன கவிதை எனப்படுகிறது. ஆங்கிலத்தில் Prose Poetry (Free verse) என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. உணர்ச்சி பொங்கக் கவிதை படைக்கும் இடங்களில் யாப்பு தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் இவ்வடிவத்தை இலகுவாகக் கையாண்டுள்ளார். இவ்வசன கவிதையே புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணமாயிற்று.*

**4. சோலைக் (பூங்கா) காற்றும், மின் விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.**

**சோலைப்பூங்காற்று :**

*கோடைகாலம் வந்துவிட்டது மின் விசிறியே உனக்கு இனி ஓய்வே இருக்காதே,*

**மின்விசிறி:**

*ஆமாம் இனி எனக்கு ஓய்வே இருக்காது முன்பெல்லாம் தேவைக்கு மட்டுமே பயன்படுத்தினார்கள் அதனால் சற்று ஓய்வு இருக்கும்.*


Created by Pinkz

***சோலைப்பூங்காற்று :***

ஆமாம் தற்பொழுது அனைவரும் வீட்டுக்குள் முடங்கி விடுகின்றனர் வெளியில் சோலை, வயல் வெளிகளுக்கு வருவது இல்லை என் காற்றை அவர்கள் விரும்புவதும் இல்லை.

***மின்விசிறி:***

உன் காற்றே உடலுக்கு நல்லது, தூய்மையானது அதை மனிதர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

Pinkz Public School
Next Generation School